**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் I - 2020**

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் I இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்-பி 110 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சான தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுரம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான யப்பான் யென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான யப்பான் யென் 5,166 மில்லியன் யப்பான் யென் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிட்டிருந்தது. பினனர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2022 யூலை 05 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ் அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டு குறைப்பாடுகள் | தொகை மில்லியனில் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் 2021 பெப்ரவரி 12 திகதிய 01-2021 ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு முரணாக, ரூபா 20.19 மில்லியனான பெறுமதி சேர் வரி தனித்தனியாக காண்பிக்கப்படாது அரசிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பிற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டிருந்தது. எனவே, அரசிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு அப் பெறுமதியினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 20.19 | 2014 இல் இருந்து பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021.02.12 திகதிய சுற்றறிக்கை சமீபத்தில் பெறப்பட்டது. வற் வரி அரசின் பங்களிப்பாக காண்பிப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனைகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் விசேட (யென்) கணக்கின் மாதாந்த வங்கி அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களின் அந்நிய செலாவணி இலாபம் ரூபா 178.64 மில்லியனாக காணப்படுகின்றதுடன் நடைமுறையிலுள்ள வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பணம் கணக்காய்வின் போது உறுதி செய்துக் கொள்ள முடியவில்லை. | 178.64 | ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் மத்திய வங்கியிடம் விசேட (யென்) கணக்கு அறிக்கை கோரப்படுகின்றது. எனினும் மத்திய வங்கி அவ்வாறான அறிக்கையை வெளியிடவில்லை. | மாதாந்த வங்கி கணக்கு அறிக்கை கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 39 (அ) உறுப்புரையின் பிரகாரம் அந்நிய செலாவணி வீதத்தின் மாற்றங்களின் தாக்கம் (இ.க.நி -21), 2020 திசெம்பர் 31 திகதியன்று செலுத்த வேண்டிய ரூபா 133.08 மில்லியனான அணிதிரட்டல் முற்பணம் மற்றும் ரூபா 141.86 மில்லியனான நிறுத்தி வைத்தல் பணம் வெளிநாட்டு பணம் செலுத்துவதற்கு தொடர்புடைய இறுதி வீதத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | 274.94 | வெளிநாட்டு பணம் செலுத்தலானது, சாதாரணமாக உரிய கொடுப்பனவு திகதியின் வீதத்திற்கு மாற்றப்படும். கணக்காய்வின் நிகழ்கால கருத்தினை ஏற்றுக்கொண்டு, 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாரான நிதி கூற்றின் 2021.12.31 இன் பிரகாரம் தொகையினை நாம் நாளதுவரையாக்குகின்றோம். | இ.க.நி 21 பிரகாரம் வெளிநாட்டு நாணய பரிவர்த்தகைளை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 செயற்திட்டத்தின் ஏனைய தகவல்கள் (இணக்கப்படாத கடன் மிகுதிகள்)**

| கணக்கீட்டு குறைபாடு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை அரசின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் கடன் மீதி ரூபா 5,710.4 மில்லியன் ஆகும். எவ்வாறெனினும், செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மேற்படி மீதி ரூபா 5,360.7 மில்லியன் ஆகும். ரூபா 485.7 மில்லியனான கடன் மீள செலுத்தல் மற்றும் பண மீள்மதிப்பு நட்டம் ரூபா 835.4 மில்லியன் ஆகியமை மேற்படி இரு மீதிகளின் வேறுபாட்டிற்கு காரணங்களாக காணப்பட்டன. | கடன் மீள செலுத்தல் திறைச்சேரியினால் கையாளப்படுகின்றது. எனவே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை கணக்குகளில் மீளசெலுத்தல்கள் பதியப்படமாட்டாது. அதன் பிரகாரம் மீள செலுத்தல்கள் குறைக்கப்பட்டு பண மீள்மதிப்பீடு சேர்க்கப்பட்டதன் பின்னர் இலங்கை அரசின் நிதிக் கூற்றுக்கள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கும். | செயற்திட்டத்தின் இறுதி கடன் மீதி இலங்கை அரசின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் செயற்திட்டத்தின் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற கடன் மீதியும் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளது பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் ஐந்து ஆண்டுகளினுள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு செயற்திட்டத்தின் காலப்பகுதியானது ஆரம்பிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் மற்றும் பத்து மாதங்கள் கடந்திருப்பினும், பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையாக 80.37 சதவீதம் மற்றும் 50.94 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், அது 2021 செப்தெம்பர் 30 இல் 93.35 சதவீதம் மற்றும் 61.50 சதவீதம் ஆக காணப்பட்டது. 2020 திசெம்பர் 31 இற்கு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பிரகாரம் பின்வருமாறு.

| இல. | நடவடிக்கை | கூறு | எதிர்பார்க் கப்பட்ட இலக்கு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரான இலக்கு | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | ஆலோசனை சேவைகள் | சதவீதம் | 89.8 | 87.2 | உரிய காலப் பகுதியினுள் எதிர்பார்க்கப்பட்ட சேவைகள் பெற்றுக் | ஜய்கா (JICA) நிறுவனத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் இறுதி வரையில் ஆலோசனை சேவை பெற்றுக்கொள்ள முடியும். | ஒப்பந்தக்காரர்களின் வேலைகள் ஆலோசனையாளர்களினால் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கொள்வதற்கு முடியாமை, ஆலோசனை காலத்தினை நீடிப்பதற்கு காரணமாகக் கூடும். | ஒப்பந்தக்காரரின் கோரிக்கை மதிப்பிடப்பட்டதன் பின்னர் எஞ்சிய வேலைகள் நிறைவு செய்வதற்காக செயற்திட்டக் முகாமைத்துவ பிரிவின் (PMU) பரிந்துரையின் அடிப்படையில் பொது முகாமையாளரினால் (GM) ஒப்பந்தக்காரருக்கு நீடிப்பு வழங்கப்பட்டது. | உண்ணிப்பாக கண்காணிக்கப்பட வேண்டியதுடன் திருத்தப்பட்ட கால வரையறைக்குள் செயற்திட்டம் நிறைவு செய்யப்படுவதற்கு திருத்தல் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உள்வாங்கல் வசதி, நீர், சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, நிலத்தடிக் குழாய்கள்- தாங்கிகள் அலுவலகக் கட்டிடங்கள், இயந்திர மற்றும் மின்சார வேலைகள் (தொகுதி–ஏ | சதவீதம் | 91.4 | 73.0 | ஒப்பந்தக் காலம் நீடிக்கும் திறன் செயற்திட்ட செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்க கூடும். | 2021 நவம்பர் 30 இற்கு, 99.7% இலக்கில் 96.7% ஆன முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. அண்ணளவாக அனைத்து சிவில் கட்டுமான பணிகளும் நிறைவு செய்யப்பட்டு, இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து M&E பொருட்களும் தளத்திற்கு வழங்கப்பட்டன. 94.51% சதவீத M&E நிறுவல்கள் 2021 நவம்பர் 30 இல் நிறைவடைந்தன. | திருத்தப்பட்ட செயற்திட்ட காலப்பகுதியினுள் எஞ்சிய லேைகள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பிரதான கடத்தல் மற்றும் பிரதான துணை – 110 மி.மீ | சதவீதம் | 83.5 | 81.8 | ஏனைய தொடர்புடைய ஒப்பந்தங்கள் தாமதித்தல் (தொகுதி சீ-1 மற்றும் தொகுதி சீ-3) மற்றும் ஒப்பந்தக் காலம் நீடிக்கும் திறன் செயற்திதட்டத்தின் | 2021 நவம்பர் 30 இற்கு, 96.8% இலக்கில் 92.94 % ஆன முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. நாளாந்தம் வேலைகள் உண்ணிப்பாக கண்காணிக்கப்பட்டு | எஞ்சிய வேலைகள் நிறைவு செய்வதற்கு மற்றும் ஒப்பந்தக்காரரின் வேைகள் உண்ணிப்பாக கண்காணிப்பதற்கு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | விட்டம் தொடக்கம் 500 மி.மீ விட்டம் - 88.7 கி.மீ பிரதான விநியோக (உயர் சக்தி பொலி அத்தலின் குழாய் - HDPE) விட்டம் 110-400 மி.மீ 163 கி.மீ நீளம்) (தொகுதி பீ) | | | | செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்க கூடும். | ஒப்பந்தக்காரருக்கு வலைய ரீதியாக வேலை நிறைவு செய்யும் இலக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. | விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இஸ்ஸின்பெ ஸ்ஸகல வலயத்தில் UPVC குழாய்கள், பொருத்திகள், விசேட உபகரணங்களைப் பொருத்துதலும் DI மற்றும் GI குழாய்கள் மற்றும் விசேட உபகரணங்களை வழங்கி | சதவீதம் | 100 | 95.0 | ஒப்பந்தம் நிறைவு செய்வதில் தாமதலானது செயத்திட்டத்தின் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்க கூடும். | தொகுதி பீ ஒப்பந்தக்காரரினால் தொகுதி பீ குழாயினை சுத்திகரித்த பின்னர் மற்றும் தொகுதி சீ-1 குழாயினை தொகுதி பீ இற்கு தொடர்புப்படுத்திய பின்னர், குழாய் வலையமைப்பினை சுத்தம் செய்தல் மற்றும் கிருமி நீக்கம் செய்தல் மட்டுமமே தவறிய ஒரே வேலையாகும். | தொகுதி சீ-1 ஒப்பந்தத்தின் பகிர்வு வழிகள் சுத்திகரித்தல் மற்றும் கிருமிநீக்கம் செய்து நிறைவு செய்வதற்காக தொகுதி பீ ஒப்பந்தத்தின் குழாய் இடுதல் நடவடிக்கைகள் நிறைவு செய்தவற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பொருத்தலும் (தொகுதி சீ-1) | | | | | | |
| (உ) | ரம்பேவ, கிழக்கு ரம்பேது, ஏத்தகட வலயங்களில் (தொகுதி-3) UPVC குழாய்கள், பொருத்திகள், மற்றும் விசேட உபகரணங்களைப் பதித்தல், D1 மற்றும் G1 குழாய்கள் பொருத்திகள் மற்றும் விசேட உபகரணங்கள், என்பவற்றை வழங்குதலும் பதித்தலும் (தொகுதி சீ – 3) | சதவீதம் | 100 | 95.0 | ஒப்பந்தம் நிறைவு செய்வதில் தாமதலானது செயத்திட்டத்தின் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்க கூடும். | தொகுதி பீ ஒப்பந்தக்காரரினால் தொகுதி பீ குழாயினை சுத்திகரித்த பின்னர் மற்றும் தொகுதி சீ-1 குழாயினை தொகுதி பீ இற்கு தொடர்புப்படுத்திய பின்னர், குழாய் வலையமைப்பினை சுத்தம் செய்தல் மற்றும் கிருமி நீக்கம் செய்தல் மட்டுமமே தவறிய ஒரே வேலையாகும். | தொகுதி சீ-1 ஒப்பந்தத்தின் பகிர்வு வழிகள் சுத்திகரித்தல் மற்றும் கிருமிநீக்கம் செய்து நிறைவு செய்வதற்காக தொகுதி பீ ஒப்பந்தத்தின் குழாய் இடுதல் நடவடிக்கைகள் நிறைவு செய்தவற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மொத்த செயற்திட்டத்தின் 35.13 சதவீதமான செயற்திட்டத்தின் பிரதான விநியோகம், பிரதான கடத்தல் மற்றும் பிரதான குழாயிடல் ஒப்பந்தம் 2019 திசெம்பர் 11 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒப்பந்தக் காலம் 2022 சனவரி 31 ஆந் திகதி வரை ஆறு தடவைகள் நீடிக்கப்பட்டது. 2021 நவம்பர் 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம், எஞ்சிய 5,080.28 மீட்டரிலான குழாயிடல் பணிகள், 72,048.15 மீட்டரிலான அழுத்த சோதனை பணிகள், 50 குறுக்கு பால பாதைகள் மற்றும், 103 ஓரதர் அறைகள் பொருத்துதல் நிறைவு செய்யப்படல் வேண்டும். எவ்வாறெனினும், மேற்படி எஞ்சிய வேலைகள் 2022 சனவரி 31 திகதிக்குள் நிறைவு செய்ய முடிகின்றமை தொடர்பில் சந்தேகமே. | சீ1/ சீ2 சிறிய விட்ட குழாய் வழியினை சுத்திகரித்தல் மற்றும் கிருமி நீக்கம் செய்தலில் தாக்கமொன்று காணப்படுகின்றது. எதிர்மறை தாக்கத்தினை குறைத்துக் கொள்வதற்காக, தொகுதி பீ இற்கு வலய ரீதியாக நிறைவு செய்யும் திட்டம் அறிமுகப்படுத்திக் கொடுக்கப்பட்டது. இந்த திட்டத்தின் ஊடாக வலய ரீதியாக எஞ்சிய வேலைகள் அடையாளப்படுத்தப்பட்டு மேற்படி எஞ்சிய வேலைகள் நிறைவு செய்யுமாறு ஒப்பந்தக்காரருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | தொகுதி பீ ஒப்பந்தம் நிறைவு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இஸ்ஸின்பெஸ்ஸகல வலயத்தில விநியோக குழாய்களாக 115 கி.மீட்டர் நீளத்திற்கு UPVC, DI மற்றும் GI குழாய்களை பதித்தல் (தொகுதி சீ-1 ஒப்பந்தம்) மற்றும் ரம்பேவ, கிழக்கு ரம்பேது, ஏத்தகட வலயங்களில் (தொகுதி-3 ஒப்பந்தம்) 119.6 கி.மீ நீளமான UPVC, DI மற்றும் GI குழாய்கள் பதித்தல் முறையாக 2020 பெப்ரவரி 29 மற்றும் 2019 யூலை 15 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் குழாய் பதித்தல் நடவடிக்கைகள் நிறைவடைந்திருப்பினும், தொகுதி பீ ஒப்பந்தத்தின் கீழ் பிரதான விநியோக மற்றும் பிரதான கடத்தல் குழாய் பணிகள் நிறைவடையும் வரை ஒப்பந்தக்காரர்களினால் குழாய் வழிகளை சுத்திகரித்தல் மற்றும் கிருமி நீக்கம் செய்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், | தொகுதி பீ இன் எஞ்சிய பணிகள் வலய ரீதியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ், தொகுதி பீ ஆனது சுத்திகரித்தல் மற்றும் கிருமி நீக்கம் மேற்கொண்டதன் பின்னர் இந்த வலையமைப்பின் சுத்திகரித்தல் மற்றும் கிருமிநீக்கம் செய்தல் மேற்கொள்ள முடியும்.<br><br>சீ1/சீ2 தொகுதியின் இறுதி விலைப்பட்டியலானது சுத்திகரிப்பு மற்றும் கிருமிநீக்க பணிகள் நிறைவடைந்த பின்னர் ஒப்பந்தக்காரரினால் முன்வைக்கப்படல் வேண்டும். | தொகுதி சீ-1 மற்றும் தொகுதி சீ-2 ஒப்பந்தங்களின் சுத்திகரிப்பு மற்றும் கிருமிநீக்க நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2021 மார்ச் 12 ஆம் திகதி இவ் ஒப்பந்தக்காரர்களுக்கு சுத்திகரித்தல் மற்றும் கிருமி நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உட்பட்டு செயற்திட்டத்தினால் நிறைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. | | |
| (இ) | செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பு மற்றும் கட்டுமான மேற்பார்வைக்கான ஆலோசனை ஒப்பந்தும் 2014 யூன் 23 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் 2017 செப்தொம்பர் 14 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் தொகுதி – ஏ மற்றும் தொகுதி – பீ ஒப்பந்தங்கள் நிறைவு செய்வதற்கு தாமதமாகியதன் காரணத்தினால் ஒப்பந்தத்தின் கால வரையறை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆலோசனை சேவைக் காலம் நீடிக்கப்பட்டதன் காரணத்தினால் ரூபா 120.8 மில்லியன் மற்றும் யப்பான் யென் 24.6 மில்லியன் மேலதிக ஆலோசனை சேவைக் கட்டணமாக செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | ஜய்கா (JICA) நிறுவனத்திற்கு அமைவாக செயற்திட்டம் இறுதி வரையில் ஆலோசனை சேவை பெற்றுக் கொள்ளக் கூடும். அனைத்து தரப்பினரதும் கோரிக்கைகள் மதிப்பிடப்பட்டதன் பின்னர் மேல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்காக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் பரிந்துரையின் கீழ் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளரினால் ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு கால நீடிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டது. | உரிய காலத்தினுள் TOR இன் பிரகாரம் பூரண ஆலோசனை சேவையொன்று பெற்றுக் கொள்ளல் வேண்டும்.. |

## 3.3 தள ஆய்வுகளின் போதான அவதானிப்புக்கள்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்வாங்கல் வசதி, நீர் சுத்திகரிப்பு பொறி, நிலத்தடி குழாய்கள், உயர்த்திய தாங்கிகள், அலுவலக கட்டிடங்கள், இயந்திர மற்றும் மின் வேலைகள் தொடர்பான செயற்திட்டத்தின் பிரதான கட்டுமானம் 2018 மார்ச் 13 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 ஏப்ரல் 31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் ஒப்பந்தத்தின் கால வரையறை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பெதீக செயன்முறை 2020 திசெம்பர் 31 திகதியன்று எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றமான 91.4 சதவீத்தினை பார்க்கிலும் 73 சதவீதம் | WTP இன் உள்வாங்கல் கட்டுமானம் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டு தற்போது இயந்திர நிறுவல்களின் பரிசோதிக்கும் செயல்பாட்டில் காணப்படுகின்றன. 2021 நவம்பர் 30 இற்கு ஏ தொகுதி ஒப்பந்தத்தின் கீழ் 96.7 % பௌதீக முன்னேற்றத்தினை அடைந்திருந்தது. | நிலுவை வேலைகள் தாமதமின்றி நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைந்திருந்தது. முற்ற குழாய் பணி, மீள்நிரப்பல் பணி, நில அமைவு மற்றும் அத்காடு உயர்த்திய கோபுர உட்கூரை பணிகள் நில அமைவு, சீராக்கம் மற்றும் சுத்திகரிப்பானது நிறைவு செய்யப்பட்டிராமை பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | | |
| (ஆ) | DI குழாய்கள் மற்றும் பொருத்துதல் HDPE குழாய்கள் தரமான முறையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிராமை மற்றும் குழாய் முற்றம் முறையாக பேணிச் செல்லப்படாமை பீ தொகுதி ஒப்பந்தக்காரரின் குழாய் முற்றத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, சில குழாய்கள் மற்றும் பொருத்துதல்கள் துருப்பிடித்திருந்தன. | மழைக் காலத்தினுள் ''இல்லுக்'' மற்றும் ''மான'' ஆகியவை விரைவாக வளர்ந்ததன் காரணத்தினால் கலைந்த குழாய்களை முறைமைப்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. போக்குவரத்தின் போது மற்றும் இறக்கும் போது ஏற்பட்ட சேதங்களின் காரணத்தினாலும் சில துருப்பிடித்த குழாய்கள் அவதானிக்கப்பட்டன. | குழாய்கள் தரமாக களஞ்சியப்படுத்தி முறையாக பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கடன் மீளசெலுத்துவதற்கு உரிய திகதி 2020 மார்ச் 20 ஆக காணப்பட்டது. பின்னர் தொகுதி ஏ மற்றும் தொகுதி பீ ஒப்பந்தங்கள் நிறைவு செய்வதற்கு ஏற்பட்ட தாமதத்தினால் கடன் காலம் 2022 யூலை 05 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. எவ்வாறெனினும், கடன் பயன்பாடானது 2020 திசெம்பர் 31 திகதியில் யப்பான் யென் 3,214.81 மில்லியன் ஆன தொகையாக அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட கடன் தொகையில் 62.23 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், அரசு 2020 மார்ச் தொடக்கம் 2021 செப்தெம்பர் 17 வரை கடன் வழங்கும் நிறுவர் நிறுவனத்திற்கு யப்பான் யென் 558.51 மில்லியனிற்கு சமனான ரூபா 994.38 மில்லியன் செலுத்தியுள்ளது. அதன் பிரகாரம், செயற்திட்டத்தினை நிறைவு செய்வதற்கும் கடனை முழுமையாக பயன்படுத்துவதற்கும் முன்னரே கடன் மீளச் செலுத்தல் ஆரம்பிக்கப்பட்டது. | பிரதானமாக இரு முக்கிய தொடர்பு தொகுப்புக்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணத்தினால் கடன் பெற்றுக் கொடுக்கும் காலமானது 2022 யூலை வரை நீடிக்கப்பட்டுள்ளது. எனினும், JICA இனால் கடன் மீள செலுத்தும் நிபந்தனைகள் மாற்றப்பட்டிராது தொடக்க ஒப்பந்தத்தின் பிரகாரம் காணப்பட்டது. | செயற்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கடன் மீளசெலுத்தும் நிபந்தனைகள் மாற்றுமாறு JICA நிறுவனத்திடம் கோரல் வேண்டும். |

### 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொகுதி ஏ ஒப்பந்தத்திற்கு தொடர்புடைய ஒப்பந்த பில் செலுத்தல்களான ரூபா 868.74 மில்லியன் மற்றும் ஐ.அ. டொலர் 927,547 ஆன தொகை மற்றும் தொகுதி பீ ஒப்பந்தத்திற்கு தொடர்புடையதாக ரூபா 595.62 மில்லியன் மற்றும் யப்பான் யென் 892.522 மில்லியன் ஆன தொகை 2018 சனவரி தொடக்கம் 2020 யூலை வரை பில்கள் செலுத்துவதற்கான வெளிநாட்டு நிதி போதுமானதாக காணப்படாமையினால் தாமதமாகியிருந்தது. இந் நிலுவை பில் செலுத்தல்கள் 2020 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருப்பினும், ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களினால் முறையாக ரூபா 21.39 மில்லியன், 10,429 டொலர்கள் மற்றும் யப்பான் யென் 1.32 மில்லியன் என நிதிக் கட்டணங்களாக அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடன் ஒப்பந்தத்திற்கு முரணாக நிதிக் கட்டணங்களில் 98 சதவீதம் 2021 ஆம் ஆண்டின் இலங்கை அரச (GOSL) வருமானத்தின் கீழ் செலுத்துவதற்கு பதிலாக கடன் வருமானத்தின் ஊடாக கைதவறலாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அனைத்து செயற்திட்டங்களுக்காகவும் வெளிநாட்டு நிதி ஒதுக்கீடானது அரசினால் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தினால் இது இடம்பெற்றது. பொது முகாமையாளரினால் (GM) பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் பின்னர் கடன் ஏற்பாட்டினுள் தொகுதி ஏ மற்றும் பீ ஒப்பந்தங்களின் நிபந்தனைகளின் பிரகாரம் நிதி கட்டண செலுத்தல்கள் மேற்ககொள்ளப்பட்டன. | கடன் வருமானத்தின் ஊடாக பொருத்தமான செலுத்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் கடன் ஒப்பந்தத்தின் பிரகாரம், பொது நிர்வாகச் செலவுகளானது கடன் வருமானத்தின் நிதியளிப்பிற்கு பொருத்தமற்றவை. எனினும், அதற்கு முரணாக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் (PMU) பதவியணிக்காக மாறுநிலை கட்டளையின் கீழ் ரூபா 3.6 மில்லியன் ஆன தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட பதவியணியின் பற்றாக்குரையின் காரணத்தினால் மாறுநிலை கட்டளை குழுவிற்கு முன்வைக்கப்பட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் இக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | கடன் வருமானத்தின் ஊடாக பொருத்தமான செலுத்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கட்டம் - 01 செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட இறுதி திகதி 2018 பெப்ரவரி ஆக காணப்பட்டது. பின்னர், தொகுதி ஏ மற்றும் தொகுதி பீ ஒப்பந்தங்கள் வழங்கலின் தாமதம் மற்றும் மோசமான செயலாற்றல் காரணத்தினால் அது 2022 யூலை மாதம் வரை நீடிக்கப்பட்டது. அதன் விளைவாக, செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு (PMU) மற்றும் ஏனைய வெளி அலுவலகங்களை பேணிச் செல்வதற்காக மேலதிக பொது பணி கிரயமாக செயற்திட்டத்திற்கு ரூபா 132.7 மில்லியன் செலவினை ஏற்பதற்கு நேரிட்டது. | முன் தகுதி கட்டத்தில் ஒப்பந்தக்காரர்களினால் முன்வைக்கப்பட்ட போலி ஆவணங்கள், அனுபவ சான்றிதலுக்கு எதிரான மனு, SCAP மற்றும் JICA அங்கீகாரங்களின் தாமதம் போன்றவைகளின் காரணத்தினால் தொகுதி ஏ மற்றும் தொகுதி பீ ஒப்பந்தங்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டன. | மேலதிக கால தாமதமின்றி செயற்திட்டம் நிறைவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2010 யூலை 26 திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் பணிகள் 2020 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் RSC (NC). இன் உள்ளக கணக்காய்வின் ஊடாக கணக்காய்வு செய்யப்படுகின்றது. | 2020 ஆம் ஆண்டின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிராமை RSC உறுதி செய்ததன் காரணத்தினால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய காலத்தில் அறிக்கை முன்வைக்கப்படல் வேண்டும். |